# அகநானூற்றில் தனி மனித விழுமியங்கள் (தலைவன் கூற்றை முன்வைத்து)

# Individual Human Values in Agananooru (Presenting the Leader's Claim)

***முனைவர் ர. கண்ணன்***
உதவிப்பேராசிரியர்
இரத்தினவேலு சுப்பிரமணிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

**Dr. R. Kannan**
*Assistant Professor*
*Ratnavel Subramaniam College of Arts and Sciences, Coimbatore*

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன் கூட்டமாக வாழத் தலைப்பட்ட போது அவனிடம் சில எண்ணங்கள் தோற்றம் பெறலாயின. அவ்வெண்ணங்கள் நாகரிக முதிர்ச்சியின் காரணமாக பல்வேறு கிளைகளாகப் பிரிந்தன. பழந்தமிழர் பண்பட்ட வாழ்க்கையில் வாழும்போது பல்வேறு சூழல்கள் அவர்களை உயரிய வாழ்க்கைக்கு மாற்றியது. இனக்குழச் சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும், நட்புடனும் பழகி வந்தனர். இப்பழக்கங்கள் நாகரிக வளர்ச்சியில் விழுமியங்களாக மாறின. விழுமியங்கள் தனிமனிதனைச் சமூகத்தோடு இணைக்கும் திறன் கொண்டதாக விளங்கியது. சங்ககாலப் புலவர்கள் அகத்தையும், புறத்தையும் பாடுவதில் சிறந்து விளங்கினர். அகப்பொருள் பாடல்கள் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் போன்றோரின் உரையாடல் வாயிலாக வாழ்வியல் விழுமியங்களை எடுத்து ரைக்கின்றன. அவ்வகையில் தனிமனிதனின் வாழ்வியல் விழுமியங்கள் அகநானூறு லக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதைவிளக்கும்நோக்கில் அகநானூற்றில் தனிமனித விழுமியங்கள் (தலைவன் கூற்றை முன்வைத்து) என்னும் கட்டுரை அமைகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *அகத்திணை மாந்தர்களும் – கூற்றுகளும், அகநானூற்றில் கூற்றுமுறை, தனிமனித விழுமியங்கள், பொருளின் சிறப்புக் கூறல், அன்பின் வெளிப்பாடு*

## Abstract

*When man began to live in groups, certain ideas arose in him. As the civilization matured, these thoughts branched off into various branches. While living the cultured life of the Palandamizhar, various circumstances changed them to a higher life., they used to be kind and friendly to each other in the Nakuchu society. habits became values in the development of civilization. Values were understood to be capable of connecting the individual to society. Poets of the Sangam period excelled in singing the internal and external. Emotive songs highlight the values of life through dialogues of Thalaivan, Thalavi, Doshi, Pangan etc. In this way, the article titled "Individual Values in Akananooru (presenting the leader's claim)" is written to explain that the life values of the individual are recorded in Akananootu.*

**Keywords:** *Agattinai, Akananuru, Individual Values, Specialization of Meaning, Expression of Love.*

**Citation**

Kannan, R. "Individual Human Values in Agananooru (Presenting the Leader's Claim)." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 40–49.

**அகத்திணை மாந்தர்களும் - கூற்றுகளும்**

*ஒருவர் மற்றொருவருடன் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுகின்ற முறைக்கு கூற்று முறை என்று பெயர். கூற்று எனும் சொல் பேச்சு, உரையாடல், எடுத்துரைப்பு, மொழிதல் என்ற பல சொற்களால் கூறப்பட்டாலும், கருத்து வெளிப்பாட்டு முறை என்ற பொருளிலேயே அறிஞர்களால் பயன் படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியர்செய்யுளில் கூற்று நிகழ்த்துதற்கு உரிமையுடைய மாந்தர் பற்றிக் கூறியுள்ளார். அம்மாந்தர்களைக் களவின் கூற்று நிகழ்த்துவதற்கு உரியோர், கற்பில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியோர் என வகைப்படுத்தியும் இயம்பியுள்ளார்.*

*அகத்திணை மரபில் மாந்தர்களின் பெயர்கள் சுட்டப்படுவதில்லை. மாறாக தலைவன், தலைவி, தோழி எனப் பொதுப் பெயர்களால் சுட்டும் மரபு காணப்படுகிறது. இதனை,*

***மக்கள் நுதலிய அகனைந்திணையும்***
***சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் (தொல். பொருள். அகத். நூற்.57)***

*என்ற தொல்காப்பிய நூற்பா தெளிவாக விளக்குகின்றது. அகமாந்தர்களில், தலைவன், தலைவி, தோழி முதலியோர் முதன்மை மாந்தர்களாகவும், நற்றாய், தலைவியின் தந்தை, செவிலி, பாங்கன், பரத்தையர், கண்டோர், அறிவர், பாணன், பார்ப்பார், விறலியர், கூத்தர், இளையோர், விருந்தினர், தேர்ப்பாகன் முதலியோர் துணைமை மாந்தர்களாகவும் இடம் பெற்றுள்ளனர்.*

*பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவரும் களவின் கண் கூற்று நிகழ்த்துவதற்கு உரியோர் என்றும் அவ்வறுவரோடு பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவரும் சேர்த்துப் பன்னிருவரும் கற்பின்கண் கூற்று நிகழ்த்துவதற்கு உரியோர் என்றும் வரையறை செய்துள்ளார் என்பதை,*

***பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி***
***சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு***
***அளவியன் மரபி னறுவகை யோருங்***
***களவினிற் கிளவிக் குரிய ரென்ப (தொல். செய். நூற்.181)***

***பாணன் கூத்தன் விறலி பரத்தை***
***யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்***
***பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா***
***முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகை,த்***
***தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர் (தொல். செய். நூற்.182)***

*என்னும் தொல்காப்பிய நூற்பாக்களால் அறிய முடிகிறது. இதனால் அகத்திணை மாந்தர்களின் பெயர்கள் பாடல்களில் சுட்டப் பெறுவதில்லை என்பதும், களவில், கற்பில் என, இருநிலைகளிலும், இடம்பெறும் மாந்தர்களின் பெயர்கள் தொல்காப்பியர் சுட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கன.*

**அகநானூற்றில் கூற்றுமுறை**

*அகநானூற்றுப் பாடல்களில் சுட்டப்பட்டுள்ள மாந்தர்களின் கூற்றுகள் வாயிலாக பேசுபவர், கேட்பவர், பின்புலச் சூழல் போன்றவற்றை அறிய முடிகிறது. அகநானூற்றுப் பாடல்களில் இடம்பெறும் மாந்தர்களின் கூற்றில் அமைந்த பாடல் எண்ணிக்கையை பின்வருமாறு பகுத்துக்காணலாம்.*

| | |
|---|---|
| தலைவன் கூற்றுகள் | 103 |
| தலைவி கூற்றுகள் | 98 |
| தோழி கூற்றுகள் | 160 |
| நற்றாய் கூற்றுகள் | 7 |
| செவிலி கூற்றுகள் | 19 |
| பரத்தை கூற்றுகள் | 3 |
| பாணன் கூற்று | 1 |

மேற்காண் பட்டியலின் படி அகநானூற்றுப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரையில் தனிமனித விழுமியங்களாக தலைவன் கூற்றுப்பாடல்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டன.

**தனிமனித விழுமியங்கள்**

தனிமனித ஒழுக்கமே குடும்பத்தை வளர்க்கும், குடும்ப மேன்மை சமூகத்தை வழிநடத்தும் ஆக சமூகம் வளம்பெற ஒழுங்கமைவோடு அமைய தனிமனித விழுமியங்கள் அவசியமாகின்றன. தனிமனிதன் ஒழுக்கம் பெற்று உயர்நெறிகளை அடையவேண்டும் என்பதை சங்க இலக்கியப்பாடல்கள் வலியுறுத்தியுள்ளன.

உயர்நெறியை அடைய வேண்டுமெனில் மரபு சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைத் தெரிந்திருத்தல் வேண்டும். மனிதனின் செயல்பாடுகளினாலும், வளர்நிலைகளினாலும் சமூகம் முழுமையாக இயங்குகின்றது. தனிமனித விழுமியங்களை உறுதி செய்வனவாக, நேர்மை, உண்மை, நாணயம், நம்பகத்தன்மை, பணிவு, மெய்யான, புரிந்து கொள்ளுதல், பெருந்தன்மை, தியாகம், நன்றியுடைமை போன்றவை திகழ்கின்றன.

**தனிமனிதன் வாழும் முறைகள்**

சுயமதிப்பு, சுயசோதனைஎன்பனபோன்றஅனைத்தும்தனிமனிதவிழுமியங்களாகின்றன. ஒருவன் சமூகத்தில் பெறுகிற மதிப்பு என்பது அவன் செய்த செயல்கள் மற்றும் நன்னடத்தை வழியே அமையும்.

> மனிதர் நடத்தையில் மிகவும் பின்பற்றி நடக்க வேண்டியது பிறனில் விழையாப் பேராண்மையாகும். மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி கூறும் திருக்குறள் பிறன்மனை நயத்தல் என்னும் சமுதாயப் பெருநோயை வன்மையாகக் கண்டிக்கிறது என்பர் சேதுமணியன். தமிழ் நாவல்களில் மதிப்புகள், ப. 45

சமூகத்தில் தனிமனிதனின் அனைத்துச் செயல்களும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் நிகழ்கின்றன. ஒருவரை ஒருவர் நம்புவதற்கு அனைவரிடமும் வாய்மையும், நல்லியல்புகளும் அமைந்திருக்க வேண்டும். சமுதாயத்தைப் பற்றியுள்ள தன்னல நோய்களுக்கு மருந்தளிக்க வேண்டும். தீயன செய்பவனுக்கு வரும் தீங்கை எடுத்துக்காட்டிச் சமூக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழிகாண வேண்டும்.

*ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவது மட்டுமின்றிச் சமூக ஒழுக்கம், பண்பாடு, சுயநலமின்மை, தியாகம், தொண்டு ஆகியவற்றை தெளிவு பெறும்படி உணர்த்தல் வேண்டும்.*

*இவ்வாறு தனிமனிதன் வாழும் முறைகளும், அவன் சமுதாயத்தில் பெறுமிடங்கள் குறித்ததுமான விளக்கங்களை அறிய முடிகிறது.*

**தலைவன் கூற்றில் வெளிப்படும் விழுமியங்கள்**

*அக இலக்கியங்கள் காட்டும் தலைவன் தன்னிகரில்லா தலைமையுடையவன். பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சும் தன்மையுடையவனாகவும், அறிவுடையவகனாகவும்; ஆண்மகனுக்கு இலக்கணம் காட்டுவர் தொல்காப்பியர். இதனை,*

***பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல். பொருள். களவு. நூற். 7)***

*என்னும் நூற்பா சுட்டும்.*

***மகன் என்ற சொல் வெறும் ஆண்மகனை மாத்திரம் குறிக்கும் சொல் அன்று. நல்லூழின் பெருக்கால் எய்தலாகும் எல்லா உயர்வுகளும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற பெருந்தகையை மாட்டிலும் குறிப்பிடும் சொல் அது என்று குறிப்ப்ணீடுவர்.***

***ந. சுப்பு ரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப. 57***

*தலைவன் எஞ்ஞான்றும் முன்னோர் பொருளை வைத்து அதிலிருந்து இன்பத்தை அனுபவிக்காதவன். தன் உழைப்பிலிருந்து ஈட்டிய பொருளின் வழிதான் இன்பத்தை நுகரவேண்டும் என்ற கொள்கையுடையவன். தன் உழைப்பின் பயனை உறவினர்கள் அனுபவித்து அவர்களின் துன்பத்தைத் துடைக்கின்ற பேருள்ளம் படைத்தவனாகத் தலைவன் திகழ்கிறான்.*

***தோழியை ,ரந்து பின் நிற்கும் தலைவன் இடித்துரைக்கும் பாங்கன் முன் மடல் வலித்த தலைவன், உடன்போகும் தலைவன், பிரிவு வலித்த தலைவன், இடைச்சுரத்து நின்ற தலைவன், பாசறைக்கண் தலைவன், வினைமுற்றி மீளும் தலைவன் எனப் பிரித்து அவன் செல்லும் சூழலை வகைப்படுத்திக் காட்டுவர்***

***டாக்டர் அ. இராமகிருஷ்ணன். அகமாந்தர்களும் கூற்றுகளும், ப. 67.***

*இத்தகைய தலைவன் மனவலிமை, உறுதி, காக்கும் திறன், பொருளீட்டும் குணம், குடும்பத்தைப் பேணுதல் முதலிய பண்புகளோடு விளங்கினான் என்று அகநானூறு எடுத்துரைத்துள்ளது.*

**ஆளுமை கொண்ட தலைவனின் பண்புகள்**

*கற்பு வாழ்வில் தலைவியை விட்டுச் சிறிதும் பிரிதலை விரும்பாத தலைவன் பொருளீட்டும் பொருட்டும், போர்த்தொழில் பொருட்டும் பிரிய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறான். அவ்வாறு பிரியும் இடத்தில் பொருளின் சிறப்பையும், அதைத் தேட வேண்டிய அவசியத்தையும் அகநானூற்றுப் புலவர்கள் பல்வேறு இடங்களில் சுட்டியுள்ளனர். உறவினர் துன்பம் போக்கவும், சுற்றத்தார் பெருகவும், சுற்றம் அல்லாதோர் சுற்றத்தார் போல நம்மோடு*

*இருக்கவும் செய்யக் கூடிய பொருளைத் தலைவன் தேடினான் என்பதனை,*

***கேள் கேடு ஊன்றவும், கிளைஞர் ஆரவும்,***
***கேள் அல் கேளிர் கெழீ,யினர் ஒழுகவும்,***
***ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து;***
***ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்***
***அறம் கெழு நல் அவை உறந்தை அன்ன***
***பெறல் அருள் நன்கலம் எய்தி (அகம். 93;;; : 1-6)***

*என்ற பாடல் விளக்குகிறது.*

*அகநானூற்றில் தலைவன் கூற்று இயற்கைப்புணர்ச்சி. இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம்,தோழியிற் கூட்டம், சேட்படை. இருவகைக் குறியீடு, உடன்போக்கு, மலிவு, ஊடல் அல்லது பரத்தையற் பிரிவு, இடைச்; சுரத்தழுங்கல், வினையிடம், வினைமுற்றி மீளல், இணைந்திருத்தல் எனச் சூழல்களுக்குத் தக அமைந்துள்ளன.*

**பொருளின் சிறப்புக் கூறல்**

*மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருப்பது பொருள். அப்பொருளைப் பெறுதல் பொருட்டுத் தலைவன் வேற்று நாடுகளுக்கோ, வேற்று ஊர்களுக்கோ செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் பொழுது பொருளீட்டுவதன் நோக்கத்தைத் தலைவியிடம் கூறிச்செல்வது மரபு.*

*“அறமும் இன்பமும் ஈனும் பொருளைத் தேடச் சென்ற நான் இடையில் தேடாது மீண்டால் பழிதான் வந்து சேரும். எனவே நகைக்கு ஆளாகாமல் பொருள்வயின் செல்வோம் நெஞ்சே!” என்று தலைவன் கூறுமிடத்துப் பொருள் ஈட்டலின் சிறப்பை எடுத்துரைப்பதாக,*

***வினை நன்றாதல் வெறுப்பக் காட்டி,***
***மனை மான் கற்பின் வானுதல் ஒழிய***
***கவை முறி இழந்த செந்நிலை யாஅத்து (அகம். 33: 1-3)***

*என்னும் பாடல் அமைகிறது.*

*பார்ப்பை ஈன்ற பருந்து வருந்தி உறையும் நெடிய கிளைகளையும். பரந்த அடிகளையும் உடைய வேம்பின் புள்ளி போன்ற நிழலின் கண் கல்லாச் சிறுவர் வட்டாடுவர். இத்தகைய கொடிய வழியில் பொருளீட்டும் பொருட்டு தலைவியைப் பிரிதல் வருத்தத்தைத் தருகிறது என்று கூறி தலைவன் வருந்துகின்றதை,*

***பொருட்பிணி***
***பல்லிதழ் மழைக்ண் மாஅயோள் வயின்***
***பிரியின் புணர்வதாயின் பிரியாது (அகம். 51: 8-10)***

*என்ற பாடலடிகளால் அறியலாம்.*

*தலைவன் பொருளீட்டும் பொருட்டு அரியப் பாலை நிலத்தில் சென்றான். அவ்வழியில் யானைகள் நீரில்லாமல் வருந்திச் சென்றன. அத்தகைய காட்டில் விருப்பத்துடன் தொடங்கியச் செயலை முடிக்கவேண்டும் என்ற மனஉறுதியில் கட்டுண்டிருந்தேன். அழகிய உன் கண்களைப் பிரியாது இருந்தேன். என்னுயிரும் உடலும் அங்கிருந்ததே தவிர நினைவெல்லாம் உன்னையே எண்ணியது என்று தலைவன் கூறுகின்றான்.*

**அன்பின் வெளிப்பாடு**

*பொருள்வயினாயினும், போர்வயினாயினும் தலைவியைப் பிரியும் தலைவன் செல்லும் வழியில் தனக்கு இடைப்படும் அஃறிணைப் பொருட்கள் மீதும் இரக்கம் கொள்வதும், அவற்றைக் காணும் சமயம் தலைவியை நினைப்பதும் பாலைநில வழிகளில் நிகழும் நிகழ்வுகள் ஆகின்றன.*

*அச்சமயத்தில் அஃறிணையும் இணை பிரியாதிருக்க வேண்டும் என எண்ணுகிறான். தன் தேரின் மணி ஓசையாலோ, குதிரைகளின் காலடி ஓசையினாலோ காட்டு வழியில் இருக்கும் விலங்குகளும், பறவைகளும் இன்னல்களை அடையக் கூடாது என்பதில் தலைவன் மிகுந்த கவனம் கொண்டிருந்தான்.*

*சுர வழியில் தென்படும் விலங்கு, பறவைகளின் செயல்கள் தன் மனைவி, மக்களின் பாதுகாப்பே தன்கடன் என்பதைத் தலைவனுக்கு உணர்த்தும் படியாக இருந்தன. தலைவன் நீண்ட காலம் ஊரைவிட்டும் உரியவளை விட்டும் பொருளீட்டச் சென்றான். திரும்பி வரும் காலமோ காம நுகர்வுக்கேற்ற கார்காலம். வழிக்கண் நிகழும் இயற்கைக் காட்சிகள் இன்ப நுகர்வின் தூண்டுகோல்களாக அமைகின்றன. மனையை நினைந்து விரையும் எண்ணமே தலைவனுக்குத் தலைதூக்கி நிற்கிறது. தன் தேர்க்கால் ஓசையும், மணியோசையும் அவ்வியற்கை உயிர்களுக்குத் துன்பம் தரக் கூடாது என்ற மனநிலையில் பயணிக்கின்றான். இதனை,*

***குரங்கு உளைப் பொலிந்த கொய்சுவற் புரவி,***
***நரம்பு ஆர்த்தன்ன, வாங்குவள்ப் அரிய,***
***பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த***
***தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி***
***மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்,***
***உவக்காண் தோன்றும் - குறும்பொறை நாடன்*** ***(அகம். 4: 8-13)***

*என்ற பாடல் எடுத்துரைக்கிறது.*

***தலைவன் மனிதனாக வாழ்ந்தவன். தன் மனைவி அவளோடு பெறும் இன்பம், அவன் வருத்தத்தைப் போக்கும் ஆர்வம், இத்தனைக்கும் இடையில் தன்னுயிரைப்போல மன்னுயிரை ஓம்பும் பண்பாட்டை வாழ வைத்தவன் அந்தத் தலைவன். அத்தலைவனின் பண்பாடு என்றென்றும் நிலைத்து நிற்கும் பெற்றியது. என்பாரின் கருத்தும் நோக்கத்தக்கது.***

***டாக்டர். அ. கிருஷ்ணன், தமிழர் பண்பாட்டியல். ப. 236***

*பிறிதோர் வரலாற்றுச் செய்தியில் புள்ளினத்தின் மீது அன்பு கொண்ட வேண்மான் ஆய் என்பவன் மிஞிலியோடு போரிட்டு நடுப்பகலில் நடந்த போரில் இறந்துபட்டான். இதனைக் கண்ட பறவைகள் அவன் உடல் மீது தங்கள் சிறகுகளை விரித்து நிழல் உருவாக்கி வெயில் படாது காத்தன என்பதனால் பறவைகளும் அன்பு கொண்டிருந்தன என்பது தலைவன் கூற்றால் வெளிப்படுகிறது.*

*இவ்வாறு அகநானூற்றுப்பாடல்களில் தலைவன் பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்காது இருக்க வேண்டும் என்ற உயரிய விழுமியத்தைக் கொண்டிருந்தான் என்பது புலனாகிறது.*

**வினையே ஆடவர்க்கு உயிர்**

*தலைவன் தலைவியை ஓதல்,பகை,வேந்தற்குற்றுழி உதவல், தூது, காவல், பொருள் ஆறில் ஒன்றன் காரணமாக பிரிந்து செல்வது உண்டு. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு குறிப்பிட்ட காலவரையறை உண்டு. ஆண் மகனுக்குரிய கடமைகளில் ஒன்று பொருளீட்டலும், அரசனுக்கு உதவுதலும், சமுதாயக் கடமையாற்றலும் ஆகும். இச்சமயங்களில் இல்லறக் கடமை காரணமாகப் பிரிந்து செல்ல மனம் இல்லை எனினும் ''ஆடவர்க்குக் கடன் வினை செய்தலே'' என்பதனைத் தலைவனின் மனம் நினைவூட்டுகிறது. அச்சமயம் தலைவியை விட்டுப் பிரிய வேண்டுமாதலின்; பாராட்டிப்பேசுதல் தலைவனின் இயல்பு. இது ஆற்றாமைக் காரணமாக எழுக் கூடிய பாராட்டு, விருந்தோம்பல் முதலிய அறங்கள் செய்ய வேண்டுமாயின் நான் ,ங்கு இருந்தால் மட்டுமே தலைவி உயிர் வாழ்வாள். ஆதலால் அறம் செய்யும் பொருட்டுப் பொருள் தேடச் செல்ல வேண்டும் என்று தலைவன் நெஞ்சிற்கு உரைக்கின்றான்.*

***செலவிடை அழுங்கல் செல்லாமை யன்றே***
***வன்புறை குறித்த நவிர்ச்சியாகும் (தொல். பொருள். கற்பு. நூற்.44)***

*என்ற தொல்காப்பிய நூற்பா, இதனைக் காட்டும்.*

*பெருங்கொடைக்குணம் கொண்ட கோசர் நிலவு போல விளங்கும் நெய் பூசிய வேலையும், மழை முகில் போன்ற பல பரிசைகளையுமுடையவர்கள். அக்கோசரது மூங்கிலை அழிக்கும் காவிரி கடலோடு கலக்கின்ற துறையிடத்துப் பெரிய கடல் நீரானது இறாலோடு வந்து பூவோடு பெயரும். அதுபோல நான் சென்று தேடப்படும் பொருளை நீ ஓரிடத்தில் சேர்ப்பாயாக என்று தலைவன் தன் நெஞ்சிற்குக்கூறுவதாக காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியுள்ளதை,*

***மழைமருள் பல்தோல் மாவண் சோழர்***
***கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை***
***இறவொடு வந்து கோதையொடு பெயரும்***
***பெருங்கடல் ஓதம் போல***
***ஒன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே (அகம். 123: 10-14)***

*என்னும் பாடலடிகளால் அறியலாம்.*

*இவ்வாறு பொருளீட்டத் தலைவன் தன்னெஞ்சிற்குச் செலவழுங்குவித்தலைப் புலவர்களின் வாக்கால் அறிய முடிகிறது.*

**மகளிர் இயல்பு கூறல்**

*இல்லறச் சிறப்புக்குரிய மகளிர் தலைவனைப் பிரியத் துணிவில்லாது இருத்தலும், அவ்வாறு பிரியின் இல்லறக்கடன் ஆற்ற இயலாது என வருந்துதலும், போன்றே தலைவன் பிரிவின் பொழுது அவர்களை அழகுபடுத்திக்கொள்ளாது இருத்தலும் காட்டப்படுகிறது.*

***நன்னிறம் பரந்த பசலையள்***
***மின்னோ ரோதிப் பின்னுப்பிணி விடவே (அகம். 234: 17-18)***

*என்ற பாடல் தொடர் காட்டுகிறது. பெண்கள் மாலை நேரத்தில் விளக்கேற்றி வைத்து, இறைவனை வணங்குதலோடு, வானில் தோன்றும் பிறையைத் தொழுது நின்றனர் என்பதும். அதோடு பிரிவின்; பொழுது தலைவி தன் மகன் பொருட்டுப் பொய்யை மெய்யாகக்*

*கூறி மகனோடு காத்திருப்பதும், மகனோடு காத்திருக்கும் தலைவி என்பதால் தலைவன் திருமணத்திற்குப் பின் பலமுறை பொருள்வயினோ, போர்வயினோ பிரியும் சூழல் ஏற்பட்டிருப்பது என்பதும் தெரிய வருகிறது.*

*அழகிய இல்லத்தில் பல மாட்சிமைப்பட்ட அழகும், இனிய மொழியும், இறகின் அடி போன்ற பல்லும் உடைய இளையவளின் பெரிய தோள்களிடத்தில் இனிய துயில் கொள்வதைக் கைவிட மாட்டேன் என்று தலைவன் தன்னெஞ்சிற்கு உரைத்ததை,*

***.. நல்மனைப்***
***பண்மான் தங்கிய சாயல் இன்மொழி***
***முருந்தேர் முறுவல் இளையோள்***
***பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே*** ***(அகம். 193: 11-14)***

*என்னும் பாடலடிகளால் அறியலாம்.*

*தலைவன் பொருள்வயின் ஈடுபாடு கொண்டு பிரியத்துணிந்த நெஞ்சை நோக்கி நாள்தோறும் விருந்தோம்பல் முதலிய நல்லறங்கள் நிகழ்ந்து வரும் நன்மனையின் கண் தலைவியானவள் தற்காத்தல், தற்கொண்டாற் பேணுதல், தகைசான்ற சொற்காத்தல், சோர்விலாமை, வருந்தி வந்தோர்க்கு ஈதல், விருந்தோம்பல், சுற்றந்தழால் முதலான பல்வேறு மாண்புகளைக் கொண்டு வாழ அவளைக் கைவிட்டு வர நினைக்கின்றாயேஎன்று கூறும், இடத்து மகளிர் மாண்புகளும், மனையறம் காக்கும் திறனும் வெளிப்படுகின்றன. இதனை,*

***யாம்தற் குறுகினமாக ஏந்தெழில்***
***அரிவேய் உன்கண் பனிவரல் ஒடுக்கிச்***
***சிறிய இறைஞ்சினள் தலையே***
***பெரிய எவ்வம் யாமிவள் உறைவே*** ***(அகம். 230: 13-16)***
***என்னும் பாடலடிகளால் அறியலாம்.***

**குறிக்கோள் - மனப்போராட்டம்**

*அகநானூறு காட்டும் ஆடவர்கள் மனவலிமை, உடல்வலிமை கொண்டவர்களாக மட்டுமின்றித் தலைவியிடம் நீங்காத காதல் கொண்டவர்களாகவும் இருந்தனர். தலைவியைக் காண வேண்டும் என்ற வேட்கை ஒரு புறமும், எடுத்த காரியத்தை நிறைவேற்றாமல் திரும்புவது சரியன்று என அவனது அறிவு ஒருபுறமும் பேசுகிறது.*

*"நெஞ்சமே கேள்! செல்வம் மிகப் பெரிய அளவில் கிட்டியதாக இருந்தாலும் அது கனவில் தோன்றி மறையும் தன்மைக் கொண்டது. ஆதலால் தலைவியை கூறி இன்புறுவதைவிட சிறந்த பொருளை நாம் கண்டதில்லை. நீ பொருளீட்ட என்னை அழைத்தாயாகில் நாம் செல்கின்ற காற்றில் தலைவியின் குணங்கள் உன்னுடைய நெஞ்சத்தில் புகும். அதனால் நீ வருத்தம் கொள்வாய்" என்று நெஞ்சத்திற்கும் தனக்குமான மனப்போராட்டத்தை,*

***விரி திரை முந்நீர் மண் திணி கிடக்கை***
***பரிதி அம் செல்வம் பொதுமை இன்றி***
***நனவின் இயன்றது ஆயினும், கங்குல்***
***கனவின் அற்று, அதன் கழிவே*** ***(அகம். 379: 6-9)***

*என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.*

**தலைவனின் வருத்தம்**

*பொருளீட்டும் பொருட்டு வேற்று நாட்டிற்குச் சென்ற தலைவன் தலைவியை நினைந்து வருத்தம் அடைகின்றான். நீண்ட கூந்தலையும் சிவந்த அணியையும் உடைய நம் தலைவி இல்லத்தில் உறங்கினாள். இருள்பொருந்திய நள்ளிரவில் படுக்கையில் கிடந்து, கொதிக்கும் நெஞ்சத்தை வெறுத்து ஒதுக்கினாள். அவளது பூவிதழ் போன்ற குளிர்ந்த கண்களில் நீர்வடிந்தன. அதனால் கண்களில் இருந்து ஒழுகுகின்ற நீர்த்துளிகளை மெல்லிய விரலால் துடைத்தாள்,என்று தலைவன் வருந்துகின்ற நிலையை அகநானூற்று பாடல் விளங்குகின்றது. (அகம். 373)*

*களவுக் காலத்தில் தலைவன் தலைவியைக் கண்டு மகிழ மழை பொழியும் நடு இரவிலும், காட்டுப்பாதையிலும், இடுக்கு நெறிகளிலும் இடையிடையே தோன்றும் பாம்பு, யானை, புலி, சிங்கம், யாளி, முதலை போன்றவற்றிற்கு அஞ்சாதும் செல்வதை அகப்பாடல்கள் அனைத்துமே கூறுகின்றன. இப்படிப் பலவித இடர்பாடுகளைக் கடந்து தலைவியைக் காணச் சென்றபோது அவளைக் காணப்பெறாது ஒழியினும் அவளைச் சிறிதும் வெறுக்கமாட்டான். களவொழுக்கத்தையே வெறுத்து தன் வாழ்க்கையைச் செலுத்துவதாக அகநானூறு பதிவு செய்துள்ளது.*

**தொகுப்புரை**

1. *கூற்று இருநிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றதை தொல்காப்பியம் எடுத்துரைத்துள்ளது.*
2. *அகத்திணை மாந்தர்கள் களவு,கற்பு என இருநிலைகளிலும் கூற்று நிகழ்த்துவர்.*
3. *அகமாந்தர்களில், தலைவன், தலைவி, தோழி முதலியோர் முதன்மை மாந்தர்களாகவும், நற்றாய், தலைவியின் தந்தை, செவிலி, பாங்கன், பரத்தையர், கண்டோர், அறிவர், பாணன், பார்ப்பார், விறலியர், கூத்தர், இளையோர், விருந்தினர், தேர்ப்பாகன் முதலியோர் துணைமை மாந்தர்களாகவும் இடம்பெற்றுள்ளனர்.*
4. *தலைவன் மனவலிமை, உறுதி, காக்கும் திறன், பொருளீட்டும் குணம், குடும்பத்தைப் பேணுதல் முதலிய பண்புகளோடு விளங்கினான் என்று அகநானூறு பதிவு செய்துள்ளது. களவுக் காலத்தில் தலைவன் தலைவியைக் கண்டு மகிழ மழை பொழியும் நடு இரவிலும், காட்டுப்பாதையிலும், இடுக்கு நெறிகளிலும் இடையிடையே தோன்றும் பாம்பு, யானை, புலி, சிங்கம், யாளி, முதலை போன்றவற்றிற்கு அஞ்சாதும் செல்வதை அகப்பாடல்கள் எடுத்துரைத்துள்ளன.*

**அடிக்குறிப்பு**

1. *மது. ச. விமலாந்தம் (2020), (தமிழ்). தமிழ் இலக்கிய வரலாறு, தி. நகர், சென்னை, முல்லை நிலையம், பக்க எண்: 43.*
2. *சங்க இலக்கியப் பதிப்புரைகள், பாரதி புத்தக நிலையம், பக்க எண்: 38*

**References**

1. Vimalanandam, M.S., History of Tamil Literature, Mullai Nilayam, T.Nagar, Chennai, P.43, 2020.
2. Sangam Literature Editions, Bharathi Buddhakalayam, P.38.